EELANADU 13 July 2012 ஈழநாடு

# வேலணை மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

யூன்-2011 முதல் நடைமுறைப்படுத்தி வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவித் திட்டம் வெற்றிகரமாகத் தனது முதலாண்டைப் பூர்த்தி செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

வேலணை மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பொருளாதார வசதியின்மையால் தமது பட்டப் படிப்பைத் தொடரமுடியாமல் அல்லலுறும் 39 மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தலா 3000.00 ரூபா (இலங்கை ரூபா) வீதம் மாதா மாதம் 117,000.00 ரூபா நிதியுதவியை தற்பொழுது வழங்கி வருகின்றோம் என்பதைச் சங்கத்தின் சார்பில் அறியத் தருகின்றோம்.

யாழ் பல்கலைகழகம்- 29 மாணவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகம் -09 மாணவர்கள் பேராதனைப் பல்கலைகழகம் - 01 மாணவர் எமது உதவியைப் பெற்று வருகின்றனர்.

இது வரை இத்திட்டத்திற்காக மொத்தம் 13187.00 டொலர்கள் அனு ப்பப்பட்டுள்ளது. காலத்தின் கட்டாயமான இச்சீரிய பணியினைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்குச் சங்கத்தின் அங்கத்தவர்கள், கல்லூரியின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மற்றும் புலம்பெயர் மண்ணின் வர்த்தகப் பெருமக்கள் அனைவரும் தமது முழுமையான ஆதரவையும் தம்மால் இயன்ற பங்களிப்பையும் நல்குமாறு சங்கத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்வதோடு இத்திட்டம் வெற்றியடைய உதவிய நன்கொடையாளர்களுக்கும் குறிப்பாகப் பத்திரிகையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் யூலை மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது. இதற்கான விளம்பரம் 24ஆம்ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**தொடர்புகட்கு: செழியன் (416-949-7795) சிறீதரன் (416-661-3494) சிவா (416-562-4141)**